<u>வாக்குமூலம்</u>
<u>தலைமை குற்றவியல் நடுவர் நீதிமன்றம், தென்காசி.</u>
<u>வழக்கு எண் : SC.No.217/2021</u>
<u>வழக்கு சாட்சி PW-7</u>

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | கமலக்கண்ணன் | தாலுகா | : | செங்கோட்டை |
| தந்தை பெயர் | : | பாண்டியன் | தொழில் | : | சிறப்பு காவல் ஆய்வாளர் |
| கிராமம் | : | செங்கோட்டை | வயது | : | 52 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of August 13th, 2025.

**(எதிரிகள் மற்றும் எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.)**

<u>முதல் விசாரணை :</u>

நான் தற்போது சாம்பவர்வடகரை காவல்நிலையத்தில் சிறப்பு சார்பு ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 2017 ம் ஆண்டு அச்சன்புதூர் காவல்நிலையத்தில் தலைமைக் காவலராக பணியாற்றி வந்தபோது, 04.08.2017 ம் தேதி, நான், காவலர் பத்மராஜன், சிறப்பு தனிப்பிரிவு காவலர்கள் பழனிவேல்ராஜா, ஜெயராமன், பயிற்சி உதவி ஆய்வாளர் ஆண்டனின் ரமேஷ் மற்றும் காவல் ஆய்வாளர் ஆகியோர்களுடன் கள்ளத்துப்பாக்கி நடமாட்டம் சம்பந்தமாக அச்சன்புதூர் – காசிதர்மம் ரோட்டில் அன்றைய தினம் காலை 06.30 மணியளவில் ரோந்து சென்றபோது செவக்காடு விலக்கு ரோட்டில் மேற்கிலிருந்து கிழக்காக வந்த TN-67-Z-6828 என்ற எண் கொண்ட வெள்ளை நிற ஆம்னி காரை சந்தேகத்தின்பேரில் நிறுத்திய போது, பின்னர் பெயர், விலாசம் கேட்டு தெரிந்து கொண்ட ஆழ்வார், காளிமுத்து, குமாரசாமி, பீர்முகமது ஆகியோர் வாகனத்தில் தங்களது கையில் ஒற்றைக்குழல் துப்பாக்கிகளுடன்

இருந்தவர்களை பிடிக்க எத்தனிக்கையில் எங்களை பார்த்து, "எங்களை பிடிக்க முயற்சி செய்தால் உங்களை சுட்டு விடுவோம்" என்றும், பின்னர் அசிங்கமாக பேசியும் மிரட்டியவர்களை சுற்றி வளைத்து பிடித்து சம்பந்தப்பட்ட இடத்தில் அத்தாட்சி தயார் செய்ய தனிநபர் யாரும் இல்லாத காரணத்தினால் நாங்களே அத்தாட்சி தயார் செய்து, அதில் கையெழுத்து செய்தோம்.

TN–67–Z–6828 என்ற எண் கொண்ட வெள்ளை நிற ஆம்னி கார் மற்றும் அதிலிருந்த ஒற்றைக்குழல் துப்பாக்கி – 8 எண்ணம், ஏர் கன் – 2 எண்ணம், கருப்பு நிற பேட்டரி – 2 எண்ணம், கத்தி – 2 எண்ணம், கரிமருந்து கொஞ்சம், ஈய ரவைகள் – கொஞ்சம் ஆகியவற்றை கைப்பற்றி அத்தாட்சி தயார் செய்து எதிரிகளை 11.00 மணிக்கு காவல்நிலையம் கொண்டு வந்து ஆய்வாளர் அவர்கள் வழக்கு பதிவு செய்ய உதவியாக இருந்தேன். இது சம்பந்தமாக ஆய்வாளர் என்னை விசாரித்தார்கள்.

**<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை :</u>**

சம்பவயிடத்திற்கு நாங்கள் காவல் ஆய்வாளர் வாகனத்தில் ரோந்திற்கு சென்றோம். அந்த வாகனத்தை யார் ஓட்டி வந்தார்கள் என்றால் எனக்கு ஞாபகமில்லை. கைப்பற்றப்பட்ட சொத்துக்களை நிலைய பாராவிடம் ஒப்படைப்பது வழக்கம் என்றால் சரிதான். செங்கோட்டை - கடையநல்லூர் ரோடு மெயின் ரோடு என்றால் சரிதான். விவசாயம் நிறைந்த பகுதி என்றால் சரிதான். அதிக போக்குவரத்துள்ள ரோடு என்றால் சரிதான். நான் பாக்கெட் டைரி பராமரிக்கும் வழக்கம் உள்ளது என்றால் சரிதான். சம்பவ சமயத்தில் என்ன பணியில் இருந்தேன் என்று பாக்கெட் டைரியில் எழுதினேன் என்றால் சரிதான். ஆய்வாளர் விசாரணையில் பாக்கெட்

டைரியை கொடுத்தேன் என்றால் சரிதான். நான் 11.30 மணியளவில் காவல்நிலையம் திரும்ப வந்தேன். கரிமருந்து, பேட்டரி கிராமங்களில் கிடைக்கும் என்றால் சரிதான். என்னை ஆய்வாளர் சம்பவநாள் விசாரித்தார். அத்தாட்சியை கைப்பட யார் எழுதினார் என்றால் ஆய்வாளர் எழுதினார். தனிநபர்களை ஆய்வாளர் அழைத்தாரா? என்றால் யாரும் முன்வரவில்லை. நான் பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல.

எதிரிகள் மிரட்டியதினால் எனக்கு பயம் ஏற்பட்டதாகவும், அதனால் பாதுகாப்பு வேண்டும் என்றும் ஆய்வாளர் விசாரணையில் சொல்லவில்லை என்றால் சரிதான். எதிரி அசிங்கமாக பேசியதினால் எனக்கு அவமானமும், அருவருப்பும் ஏற்பட்டதாக நான் ஆய்வாளர் விசாரணையில் சொல்லவில்லை என்றால் சரிதான். 08.00 மணிக்கு தயார் செய்த அத்தாட்சியில் குற்ற எண், பிரிவு குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். நான் சொன்ன நாளில், சொன்ன நேரத்தில் எதிரிகளை கைது செய்யவில்லை என்றாலும், எதிரிகளிடமிருந்து எந்த பொருளும் கைப்பற்றவில்லை என்றாலும், ஒப்புதல் வாக்குமூலம் பெறவில்லை என்றாலும் சரியல்ல. 5, 6 எதிரிகளிடமிருந்து லைசென்ஸ் உடைய துப்பாக்கிகளை வாங்கிக்கொண்டு போய் புள்ளிவிபரக்கணக்கிற்காக வேண்டி, எதிரிகள் மீது பொய் வழக்கு தாக்கல் செய்துள்ளோம் என்றால் சரியல்ல.

<u>மறுவிசாரணை</u> –

இல்லை.

J CHRISTAL BABITHA

Digitally signed by J CHRISTAL BABITHA
Date: 2025.08.14 18:25:23 +0530